| D–1042 |
|---|

| Sub. Code |
|---|
| 10711 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கண்ணதாசன் மாங்கனி காவியத்தை எச்சூழ்நிலையில் எழுதினார்?

2. 'ஊர்வலம்' என்னும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்?

3. 'நீ எழுத மறுக்கும் எனதழகு' கவிதையில் பேசப்படும் பொருள்?

4. 'வினையெச்சம்' என்னும் கவிதை யாருடைய நினைவுகளைப் பேசுகிறது?

5. 'மு.வ.வின் செல்லப் பிள்ளை' என்று அழைக்கப்படுபவர் யார்?

6. 'இன்னொரு காந்திக்காக' என்னும் நாடகத்தின் தலைமை மாந்தர்?

7. 'இரண்டு நண்பர்களின் கதை' என்னும் சிறுகதையின் நண்பர்கள் யாவர்?

8. 'வீட்டின் மூலையில் சமையலறை' என்னும் சிறுகதையின் ஆசிரியர்?

9. 'மாறுதடம்' என்பதன் பொருள் யாது?

10. எஸ். ராமகிருஷ்ணன் எந்நூலுக்காகச் சாகித்ய அகதெமி விருது பெற்றார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குயிலின் முற்பிறப்புக்கதையைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) 'தமிழ்ப் பேறு' குறித்துப் பாரதிதாசன் கூறுமாற்றைச் சுட்டியுரைக்க.

12. (அ) அடலேறு மாங்கனி காதல் உணர்வுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'ஊசிகள்' கவிதைகள் வழி மீராவின் கவித்திறத்தைப் பாராட்டியுரைக்க.

13. (அ) மு.மேத்தா பாடும் சுதந்திர சிந்தனைகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) இளம்பிறையின் மொழிநடையில் நாட்டுப்புறத் தாக்கம் குறித்து எழுதுக.

14. (அ) இராமாயணத்தில் பெண்களின் செல்வாக்குப் பற்றி வ.சுப.மாணிக்கம் பேசுமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'பொன்னகரம்' சிறுகதையின் சிறப்பியல்புகளைச் சுட்டியுரைக்க.

15. (அ) இராஜம் கிருஷ்ணனின் களம் சிறுகதையின் சுருக்கத்தைத் தருக.

(அல்லது)

(ஆ) எஸ். ராமகிருஷ்ணனின் 'காந்தியோடு பேசுவேன்' சிறுகதையை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாரதிதாசனின் தமிழ்ப் பற்றை நும் பாடப் பகுதியால் புலப்படுத்துக.

17. தமிழ் ஹைக்கூ கவிதைகளின் தனித்தன்மைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

18. இன்னொரு காந்திக்காக நாடகத்தின் கதைக்களத்தை விவரிக்க.

19. பிரபஞ்சனின் கதைப்பின்னலை இரண்டு நண்பர்களின் கதை வழிப் பற்றி விவரிக்க.

20. பெண் உழைப்புச் சுரண்டலை 'வீட்டின் மூலையில் சமையலறை' கதை வழி எழுதுக.

**D–1043**

**Sub. Code**
**10712**

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

First Semester

இலக்கணம் நன்னூல் எழுத்து

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஐவகை இலக்கணங்கள் யாவை?

2. பாயிரத்தின் வேறு பெயர்களைக் கூறுக.

3. நூற்பொருட்பயனாக நன்னூல் கூறுவன யாவை?

4. சுட்டெழுத்துக்கள் எவை?

5. இன அடிப்படையில் எழுத்துக்களைச் சுட்டுக.

6. பகரமும் மகரமும் எவ்வாறு பிறக்கும்?

7. போலி எத்தனை வகைப்படும்?

8. எதிர்கால இடைநிலைகள் எவை?

9. மாத்திரை என்றால் என்ன?

10. ‘பதம்’ என்பதன் பொருள்? அவை எத்தனை வகைப்படும்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஆசிரியர் ஆகாதவர் இலக்கணம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) முடத்தெங்கின் தன்மையை எதற்கு ஒப்புமையாக நன்னூலார் கூறுகிறார்? விளக்குக.

12. (அ) தேன் என்னும் சொல் எவ்வாறு புணருமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியை என்றால் என்ன? அவற்றை விளக்குக.

13. (அ) சந்தியகரம் ஐ, ஔ அமையும் முறையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வினா எழுத்துக்கள் என்பன யாவை? அவற்றை எடுத்துரைக்க.

14. (அ) முதலெழுத்துக்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) மாத்திரையும் எழுத்துக்களுக்கான கால அளவும் பற்றி எழுதுக.

15. (அ) எண்கள் உருபுகளை ஏற்கும் மாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) எட்டு உருபுகளும் சாரும் இடவகையும் குறித்து வரைக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பிறப்பின் பொதுவிதி குறித்துத் தொகுத்துரைக்க.

17. திசைப்பெயர் புணர்ச்சியினை விவரிக்க.

18. பதங்களில் அமையும் இடைநிலைகளைச் சுட்டியுரைக்க.

19. நன்னூல் கூறும் சாரியை குறித்தக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. அலுவல் கடிதங்கள்(Official Letters) விவரிக்க.

| D–1044 |
|---|

| Sub. Code |
|---|
| 10713 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பெருங்கற்புதைக் குழிகளை ஆய்வாளர்கள் எங்ஙனம் வகைப்படுத்துவர்?

2. கடற்கோளால் அழிந்த பஃறுளி ஆறு பற்றி குறிப்பிடும் இலக்கியம்?

3. செப்பேடுகள் என்றால் என்ன?

4. ‘இடைக்கால உலகப்பயணிகளின் இளவரசர்’ என்று அழைக்கப்படுகின்றவர்?

5. களப்பிரர் காலத்தில் எச்சமயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன?

6. பல்லவர்களின் கடைசி மன்னனைக் கூறுக.

7. ‘தொண்டை நாடு பரவின சோழன்’ யார்?

8. எப்படையெடுப்பினால் பாண்டிய நாடு சீர்குலைந்தது?

9. ‘மங்கம்மாள் சாலை’ என்னும் புகழ்ப்பெற்ற சாலையை அமைத்தவர்?

10. எம்மாநாட்டில் சமூக நீதிக்கான முதல் குரலைப் பெரியார் பதிவு செய்தார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழகத்தின் இயற்கை சார்ந்த நிலவியல் எல்லைகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க காலப் பெண்கள் நிலை பற்றி எடுத்துரைக்க.

12. (அ) பல்லவர் செப்பேடுகள், பட்டயங்களை வகைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர்களின் கடல் கடந்த வெற்றிகளைப் புலப்படுத்துக.

13. (அ) தஞ்சைப் பெரியகோயில் சிறப்புகளை நும் பாடப் பகுதியால் எழுதுக.

(அல்லது)

(ஆ) பாண்டியர் ஆட்சியில் ஏற்பட்ட குழப்பங்களுக்கான காரணங்களைச் சுட்டுக.

14. (அ) மதுரை திருமலை நாயக்கர் வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் மராட்டியர் ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகளை விவரிக்க.

15. (அ) விடுதலைப் போருக்குத் தமிழகக் கலைஞர்கள், கவிஞர்களின் பங்களிப்பை வரைக.

(அல்லது)

(ஆ) ஆங்கிலேயர் ஆட்சியால் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க காலக் கல்வியும் ஆசிரியரும் குறித்துச் சான்றுகளுடன் விவரிக்க.

17. களப்பிரர் ஆட்சியின் வரலாற்றை நும் பாடப் பகுதியால் விளக்குக.

18. பல்லவர்களின் ஆட்சியைச் சான்றுகளுடன் சுட்டியுரைக்க.

19. நாயக்கர்களின் நிர்வாகமும் பாளையப்பட்டுப் பிரிவுகளும் குறித்துக் கட்டுரைக்க.

20. தமிழக விடுதலைப் போராட்ட முன்னோடிகள் பற்றி எடுத்துரைக்க.

**D–1045**

**Sub. Code**
**10714**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

First Semester

சிற்றிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பிரபந்தம் – சிறு குறிப்பு வரைக.

2. கல்லாடம் எந்நூலுக்கு விளக்கமாக அமைகிறது?

3. 'அன்பின் ஐந்திணை என்று அறுபது சூத்திரம்' – இத்தொடர் உணர்த்தும் நூல் எது?

4. நந்திவர்மனை எந்த இறைவனுடன் கலம்பகம் ஒப்பிடுகிறது?

5. மன்மதன் வீசும் மலரம்புகள் எவை?

6. பெரியாழ்வார் பாடிய நூல்களைக் கூறுக.

7. காளிக்குரிய நாளாகப் பரணி இலக்கியம் குறிப்பிடும் என்ன?

8. முது பேய்க்கு இந்திரசாலம் கற்றுத் தந்தது யார்?

9. மூவருலாவின் பாட்டுடைத் தலைவர்களைக் குறிப்பிடுக.

10. ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பருவங்களை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்லாம் நூலின் பாயிரம் பேசும் கடவுள் குறித்த செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாங்கி அலர் அஞ்சித் தலைவியை அஞ்சுறுத்திய திறத்தைச் சுட்டியுரைக்க.

12. (அ) நந்திக்கலம்பக நூல் அமைப்பும் பகுப்பும் குறித்து வரைக.

(அல்லது)

(ஆ) நந்திக்கலம்பகம் பேசும் அகமரபு செய்திகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கண்ணன் செய்த அருளாடல்களையும் அவதாரச் செயல்களையும் சுருக்கி வரைக.

14. (அ) பரணியின் நூல் அமைப்பையும் உறுப்புகளையும் விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) போரின் கொடுமையைக் கலிங்கத்துப் பரணி வழிப் புலப்படுத்துக.

15. (அ) குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) மீனாட்சியம்மையைக் குமரகுருபரர் தாலாட்டுமாற்றை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தாய் அறிந்தமை கூறித் தோழி வரைவு கடாவிய திறத்தைக் கட்டுரைக்க.

17. யாசோதை கண்ணனைத் தாலாட்டுமாற்றைப் பெரியாழ்வார் பாடல் வழிச் சுட்டுக.

18. செயங்கொண்டாரின் கவித்திறத்தைக் கடைத்திறப்பு வழிப் புலப்படுத்துக.

19. மடந்தையின் திருநலனையும் காதலுணர்வையும் ஒட்டக்கூத்தர் பாடுமாற்றை எழுதுக.

20. மீனாட்சியம்மை ஊசலாடும் சிறப்பை குமரகுருபரர் வழிக் கட்டுரைக்க.

| D–1046 |
|---|

| Sub. Code |
|---|
| 10721 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Second Semester

அறஇலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours — Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மனிதனுக்கு மனிதன் சொன்ன நூல் எது?

2. பெருக்கத்து வேண்டும் பணிதல் – குறிப்பு தருக.

3. பெருமை, சிறுமை உடையோரின் பண்பு யாது?

4. பிறப்பால் ஒத்த மனிதன் எதில் வேறுபடுகிறான்?

5. நாலடியரைத் தொகுத்து உரை எழுதியவர் யார்?

6. வறுமையுடையவர் அணியத்தக்க ஆபரணம் எதுவென நாலடியார் கூறுகிறது?

7. கட்டுச்சோறு யாருக்குத் தேவையில்லை?

8. தமிழ் மூவாயிரம் என அழைக்கப்பெறும் நூல் எது?

9. இறந்தபின் உடன்வருவன எவையென திருமந்திரம் உரைக்கிறது?

10. நீதிநெறி விளக்கம் – நூலின் ஆசிரியர் யார்?

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குடிமை அதிகாரச் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மானம் குறித்து வள்ளுவர் யாது உரைக்கிறார்? விளக்குக.

12. (அ) வள்ளுவத்தின் வாழ்வியல் சிந்தனைகள் யாவை?

(அல்லது)

(ஆ) பெருமையுடையாரின் பண்புகளைக் கூறுக.

13. (அ) பண்புடைமை அதிகாரம் உரைக்கும் செய்திகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நாலடியார் கூறும் அறிவுடைமை யாது?

14. (அ) கல்வி குறித்து நாலடியார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பழமொழி நானூற்றில் அறியத்தகும் நல்லொழுக்கங்கள் யாவை?

15. (அ) 'நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே' – விளக்குக.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் கூறும் கல்வியின் சிறப்பு யாது?

## பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. மானமுடையவர்கள் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை வள்ளுவர் வழி விவரிக்க.

17. சான்றாண்மை நெறிகளாக வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

18. பிறன்மனை நயவாமை நன்மையளிக்கும் என்பதை நாலடியார் வழிநின்று விளக்குக.

19. பழமொழிநானூறு கூறும் அறக்கருத்துக்களைத் தொகுக்க.

20. நீதிநெறி விளக்கம் ஒரு நீதி நூலா – ஆராய்க.

———————

**D–1047**

| **Sub. Code** |
|---|
| **10722** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Second Semester

இலக்கணம் : நன்னூல் சொல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. மூவகை மொழிகள் யாவை?

2. பெயர்ச்சொல்லின் இலக்கணம் யாது? சான்று தருக.

3. ஆகுபெயர் என்றால் என்ன?

4. வேற்றுமை உருபுகளை ஏற்காத பெயர்கள் யாவை?

5. வினைமுற்று என்றால் என்ன? சான்று தருக.

6. முற்றெச்சம் என்பதன் பொருள் யாது?

7. ஓ கார இடைச்சொல் தரும் பொருள் யாது?

8. மிகுதி எனும் குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?

9. ஒன்றொழிப் பொதுச் சொல் யாவை?

10. நாலறிவுயிர்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வழக்கு என்றால் என்ன? அதன் வகைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மூவிடப் பெயர்கள் குறித்து விளக்குக.

12. (அ) உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைச்சொல்லின் இருவகைகள் குறித்து எழுதுக.

13. (அ) வினையெச்ச வாய்ப்பாடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வழாநிலை, வழுவமைதி குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

14. (அ) தொகா நிலைத் தொடர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வினா வகைகள் குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

15. (அ) இடைச்சொல் என்றால் என்ன? அது உணர்த்தும் பொருள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிருடையப் பொருள்களின் பண்புகள் குறித்து நன்னூலார் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சொல் பாகுபாடு குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. வேற்றுமை வகைகள் குறித்து விவரி.

18. வினைமுற்று குறித்தச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

19. தொகைநிலைத் தொடர் மொழிகள் குறித்து விளக்கியெழுதுக.

20. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

———————

| D–1048 |
|---|

| Sub. Code |
|---|
| 10723 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Second Semester

தமிழ்மொழி வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. கிளைமொழி என்றால் என்ன?

2. மருங்கொலி எழுத்துக்களாக அழைக்கப்படுவன யாவை?

3. விளக்குக : மூக்கொலி.

4. தன்வினை, பிறவினையை ஏற்படுத்தும் ஒலி வினை வடிவங்கள் எவை?

5. மொழி வரலாறு என்ற நூலின் ஆசிரியர் பெயரை எழுதுக.

6. ஆங்கிலேயர் காலத்தில் டகர-ரகர ஒலிகளின் இயக்கம் எவ்வாறு இருந்தது?

7. கீழ்கண்ட கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்க. Governance, Patent.

8. மொழிக்கு முதலில் இடம்பெறும் வெடிப்பொலிகள் எவையெவை?

9. உடம்படு மெய் என்றால் என்ன?

10. பெரியார், எழுத்தில் செய்த சீர்திருத்தங்கள் என்னென்ன?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடையளி.

11. (அ) தொல் திராவிடம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) அகக்கோட்பாடு என்றால் என்ன? விளக்குக.

12. (அ) மராட்டியத் தமிழ் மற்ற ஆட்சியாளர்களின் தமிழிலிருந்து எங்ஙனம் வேறுபடுகிறது?

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையினை எடுத்துரைக்க.

13. (அ) தற்கால ஆய்வுகளில் கல்வெட்டுகள் பெறுமிடத்தை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தற்காலத் தமிழில் இடம்பெறும் பிறமொழிச் சொற்களை இனம் காண்பது எங்ஙனம்?

14. (அ) கிளைமொழியின் செல்நெறிகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் செய்த எழுத்துச் சீர்திருத்தம் என்னென்ன? விளக்குக.

15. (அ) சொற்பொருள் காலந்தோறும் மாறுவதற்கான காரணங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே – எங்ஙனம்? சான்றுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. தொல்காப்பியத் தமிழ் குறித்து விவரிக்க.

17. இக்காலத் தமிழில் இடம்பெறும் பிறமொழிச் சொற்கள் குறித்துக் கட்டுரை வரைக.

18. கலைச்சொல்லாக்கம் என்றால் என்ன? அதன் தேவையினை மதிப்பிடுக.

19. மெய்யொலி மாற்றங்கள் குறித்து விரித்துரைக்க.

20. தமிழ் வரிவடிவ வரலாறு குறித்துக் கட்டுரைக்க.

———————

**D–1049**

**Sub. Code**
**10724**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கிளைமொழி என்றால் என்ன?
2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலாசிரியர் யார்?
3. பண்பட்ட ஐந்து திராவிட மொழிகளின் பெயர்களைக் கூறுக.
4. இந்திய மொழிக் குடும்பங்கள் எவை?
5. மொழிக்கு அடிப்படையாக அமைவது எது?
6. தமிழுக்கு வெளிநாட்டறிஞர்கள் குறிப்பிட்ட வேறுபெயர்களில் நான்கினைக் கூறுக.
7. நடுத்திராவிட மொழிகளில் இரண்டினைக் கூறுக.
8. மூலத்திராவிட மொழியில் எத்தனை உயிரொலிகள் உள்ளன?
9. பெயரடை என்றால் என்ன?
10. மூவிடப்பெயர்கள் எவை?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) இந்தோ-ஐரோப்பிய மொழியின் எட்டு பிரிவுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்மொழி பேசப்படும் பகுதிகள் குறித்து எழுதுக.

12. (அ) முதல் ஒலி, துணை ஒலி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐகார, ஔகார ஒலிகள் குறித்து எழுதுக.

13. (அ) திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்களைப் பிரிக்கும் முறையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சுட்டு, வினாப் பெயர்களைக் குறித்து விளக்குக.

14. (அ) பத்து, நூறு என்னும் எண்ணுப்பெயர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) வினைவகைகள் குறித்து கால்டுவெல் கூறுவன யாவை?

15. (அ) பெயரெச்சங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தொழில் பெயர்கள் குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திராவிட மொழிகளின் சிறப்பை விரித்துரைக்க.

17. தென்திராவிட மொழிகளில் தமிழ்மொழியின் சிறப்பினை விளக்கி வரைக.

18. உயிரொலிகளின் பிறப்பு குறித்து கட்டுரை வரைக.

19. திராவிட மொழிகளில் பால் பாகுபாடு குறித்து விவரிக்க.

20. திராவிட மொழிகளில் வினைச் சொற்கள் காலம்காட்டும் முறையை விளக்குக.

| D–1050 |
|---|

| Sub. Code |
|---|
| 10731 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Third Semester

சமய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' எனப் பாடியவர்?

2. திருப்பாவைக்கு ஆண்டாள் இட்டப் பெயர் யாது?

3. 'தாண்டக வேந்தர்' எனப் போற்றப்படும் நாயன்மார்?

4. திருவார்த்தை பதிகம் எத்தலத்தில் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது?

5. திருப்பூவணத்தைப் பாடிய நாயன்மார்களில் இருவரைச் சுட்டுக.

6. குதம்பைச் சித்தர் – பெயர்க்காரணம் தருக.

7. 'கற்பனைக் களஞ்சியம்' எனப் பாராட்டப்படும் அருளாளர்?

8. வள்ளலார் எத்தல முருகனைப் போற்றி தெய்வமணிமாலையைப் பாடினார்?

9. பராபரக்கண்ணி பாடிய இசுலாமியச் சித்தர் யார்?

10. கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்படுபவர்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சிவபெருமானின் திருவடிப் பெருமைகளைத் திருமூலர் பாடுமாற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தோழிகளைத் துயிலெழுப்பும் ஆண்டாளின் செயலைத் தொகுத்துரைக்க.

12. (அ) பாண்டிய நாட்டுச் சைவ தலங்களில் எழுந்த இலக்கியங்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) கடையனுக்கும் கடைத்தேற்றம் நல்கும் திருத்தலமாக நாவுக்கரசர் கூறுவனவற்றை எழுதுக.

13. (அ) மாணிக்கவாசகர் எண்ணப்பதிகத்தைப் பாடியதற்கான நோக்கத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குதம்பைச் சித்தர் உண்மையான ஞானியரை இனங்காட்டும் தன்மையை எழுதுக.

14. (அ) சிவனடியார்களின் பெருமைகளைச் சிவப்பிரகாசர் பாடல்கள் வழிக் கூறுக.

(அல்லது)

(ஆ) வள்ளலார் முருகனிடம் வேண்டி நிற்குமாற்றைத் தொகுத்துரைக்க.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபின் இறைப்பற்றைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) எச்.ஏ. கிருட்டிண பிள்ளை இரட்சண்ய மனோகத்தில் வேண்டுவனவற்றை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நிறைவான அருள் பெற திருமூலர் கூறும் வழிமுறைகளை விரித்துரைக்க.

17. பாவை நோன்பின் சிறப்புகளை ஆண்டாள் பாடல்களின் வழிப் புலப்படுத்துக.

18. திருப்பூவணத்து இறைவனை நாயன்மார்கள் பாடுமாற்றைத் தொகுத்துரைக்க.

19. சிவப்பிரகாசர் வேண்டுவனவற்றை இறைவனிடம் கேட்கும் முறையைப் புலப்படுத்துக.

20. தெய்வமணி மாலை பேசும் அறக் கருத்துக்களைச் சான்றுகளுடன் விளக்குக.

———————

**D–1051**

| **Sub. Code** |
| --- |
| **10732** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Third Semester

இலக்கணம் அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பெருந்திணை – பொருள் கூறுக.
2. குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதுகளைச் சுட்டுக.
3. மருதத்திணைக்குரிய ஒழுக்கத்தைக் குறிப்பிடுக.
4. கற்பில் நிகழும் பிரிவுகள் எத்தனை வகைப்படும்?
5. ஐந்திணைக்குரிய மணமுறையைக் குறிப்பிடுக.
6. யாப்பருங்கலக்காரிகை எந்தப் பாவால் இயற்றப்பட்டுள்ளது?
7. இயற்சீர் எத்தனை அசைகளால் ஆனது?
8. நான்கு சீர்களால் அமையும் அடி யாது?
9. அடிப்படை பாக்கள் எவை?
10. ‘உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

    விழிப்பது போலும் பிறப்பு’ இக்குறளில் அமைந்திருக்கும் தொடையைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஐந்திணைக்குரிய முதற்பொருட்களை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை பற்றியக் குறிப்புகளைத் தொகுத்துரைக்க.

12. (அ) வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) உடன்போக்கின் வகைகளை எடுத்தெழுதுக.

13. (அ) கற்பின் பகுதிகளைச் சான்றுகளுடன் விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாயில்களுக்குரிய உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள் பற்றி எழுதுக.

14. (அ) பாக்களுக்குரிய ஓசைகளையும் வகைகளையும் விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) மருட்பாவின் வகைகளை இலக்கியச் சான்றுகள் தந்து விவரிக்க.

15. (அ) யாப்பு உறுப்புகளில் தொடை பெறும் முக்கியத்துவத்தை உணர்த்துக.

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவின் வகைகளைச் சுட்டி விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மருதத்திணைக் கருப்பொருட்களைச் சான்றுகள் காட்டி விவரிக்க.

17. அறத்தொடு நிற்போரும் முறைகளும் குறித்து விளக்கிடுக.

18. யாப்பருங்கலக்காரிகை பேசும் செய்யுள் உறுப்புகளைச் சுட்டியுரைக்க.

19. பாக்களுக்குரிய தளைகளை வகைப்படுத்தி விளக்குக.

20. வெண்பாவின் பொது இலக்கணத்தைச் சான்றுகள் தந்து விவரிக்க.

**D–1052**

**Sub. Code**
**10733**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Third Semester

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அகழ்வாய்வு நடைபெற்ற தமிழக இடங்களில் இரண்டினைக் கூறுக.

2. முச்சங்கங்கள் இருந்த இடமாகக் கூறுபடுவனவற்றைச் சுட்டுக.

3. 'புலவராற்றுப்படை' எனச் சிறப்பிக்கப்படும் பத்துப்பாட்டு நூல் யாது?

4. மூவேந்தர் காப்பியம் – சிறு குறிப்பு வரைக.

5. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயரை எழுதுக.

6. ஏசல் இலக்கியம் என அழைக்கப்படுவது?

7. யாருடைய பாடல்களில் குணங்குடி மஸ்தான் ஈடுபாடு கொண்டிருந்தார்?

8. 'தமிழ்த்தாய் வாழ்த்து' இடம் பெற்றிருக்கும் நூல்?

9. ‘ஆறில் ஒரு பங்கு’ என்னும் சிறுகதையின் ஆசிரியர்?

10. ‘கண்ணீர்ப்பூக்கள்’ என்னும் கவிதைத் தொகுதியின் ஆசிரியர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ்மொழியின் தனித்தன்மைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத்தின் நூல் பகுப்பும் சிறப்பும் பற்றி எழுதுக.

12. (அ) எட்டுத்தொகை நூல் பகுப்பையும் சிறப்பையும் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை இலக்கியங்கள் பற்றியச் செய்திகளை எடுத்துரைக்க.

13. (அ) மாணிக்கவாசகரின் இறைப்பற்றை நும் பாடப்பகுதியால் உரைக்க.

(அல்லது)

(ஆ) பரணி இலக்கியத்தின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி குறித்தும் எழுதுக.

14. (அ) இருபதாம் நூற்றாண்டு நாடகம் பெற்ற வளர்ச்சியைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் இலக்கணத்தைச் சான்றுகள் தந்து விளக்குக.

15. (அ) பாரதியாரின் பன்முக ஆற்றலைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) முடியரசன் கவிதைத் தொண்டினைப் பற்றி விளக்கி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் <u>மூன்றனுக்குக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.

16. முச்சங்கங்கள் குறித்த வரலாற்றைச் சுருக்கி வரைக.

17. திருக்குறளின் தனித்துவத்தைச் சான்றுகளுடன் புலப்படுத்துக.

18. தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம் என்னும் கருத்தை நிறுவுக.

19. ஆழ்வார்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டியுரைக்க.

20. கிறித்தவர்களின் தமிழ்த்தொண்டு நும் பாடப்பகுதியால் விவரிக்க.

---

**D–1053**

**Sub. Code**
**10734**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Third Semester

காப்பிய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. புகார் காண்டத்தில் உள்ள காதைகளின் எண்ணிக்கையைக் கூறுக.

2. வஞ்சிக் காண்டத்தின் முதல் காதை எது?

3. நரிவிருத்தம் பாடிய காப்பிய ஆசிரியர்?

4. சீவக சிந்தாமணியின் வேறு பெயர்களைக் சுட்டுக.

5. காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் நூல்களைக் குறிப்பிடுக.

6. திருத்தொண்டர் புராணத்தின் வேறு பெயரினைக் கூறுக.

7. அயோத்தியா காண்டத்தில் உள்ள படலங்கள் எத்தனை?

8. பூசலார் நாயனார் பிறந்த ஊர் எது?

9. வீரமாமுனிவர் எழுதிய நூல்களில் இரண்டினை எழுதுக.

10. மானுக்குப் பிணைநின்ற படலம் இடம் பெறும் காப்பியம் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) இளங்கோவடிகளுக்குக் குன்ற குறவர் கூறிய விந்தையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) புகார் நகர சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

12. (அ) கண்ணகிக்குச் சேரன் சிலையெடுத்த வரலாற்றைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சீவக சிந்தாமணி நூல் தோன்றிய வரலாற்றை எடுத்தெழுதுக.

13. (அ) கம்பராமாயண அமைப்பும் பகுப்பும் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) இராமன் – குகன் சந்திப்பைக் கம்பர் பாடுமாற்றை எழுதுக.

14. (அ) திருத்தொண்டர் புராண சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மனக்கோயிலில் நடைபெற்ற மங்கள விழாவினைப் புலப்படுத்துக.

15. (அ) வானவர் படைத்த விருந்தா வீரமாமுனிவர் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) வலையில் சிக்கிய மானின் துன்ப கதையை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. மருவூர்ப் பாக்கம் பட்டினப்பாக்கம் ஆகியவற்றை சிலப்பதிகாரம் வழி நின்று விளக்குக.

17. சீவகன் கேமசரி திருமணம் நடைபெற்ற வரலாற்றை எழுதுக.

18. இராமனின் முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகளைத் தொகுத்துரைக்க.

19. பாலை நிலத்தின் இயல்புகளைத் தேம்பாவணி வழிப் புலப்படுத்துக.

20. மானுக்குப் பிணை நின்ற மாமனிதர் 'நபி' – என்னும் கருத்தை நிறுவுக.

———————

| D–1054 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fourth Semester

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பாஞ்சாலி சபதத்தின் மூலநூல் எது?

2. துரியோதனனுக்கு உறுதுணையாக நின்றவர் யார்?

3. ரூபாயத் என்பதன் பொருள் தருக.

4. உவமைக்கவிஞர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

5. சுரதா குறிப்பிடும் அனுபவத்தின் சிக்கனம் எது?

6. வாடல் தவிர்க்க வரும்படி கவிஞர் கண்ணதாசன் யாரை அழைக்கிறார்?

7. கவிக்கோ என்று எந்தக் கவிஞர் போற்றப்படுகிறார்?

8. மலை எவ்வாறு மாறியதாக பிச்சமூர்த்தி பாடுகிறார்?

9. கல்யாண்ஜி வாழ்க்கையை எதனுடன் ஒப்பிடுகிறார்?

10. கழனியுரனின் இயற்பெயர் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாரதிதாசன் கூறும் புதியதோர் உலகு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பீமன் செய்த சபதத்தினை விளக்குக.

12. (அ) நிகழ்காலத்தை அனுபவித்தல் பற்றிய உமர்கய்யாம் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) சிக்கனத்தின் முக்கியத்துவத்தை கவிஞர் சுரதா எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

13. (அ) தைப்பாவையை கண்ணதாசன் எங்ஙனம் வாழ்த்திப் பாடுகிறார்?

(அல்லது)

(ஆ) கண்ணாடிச் சிறகுள்ள பறவையின் அழகை எடுத்துரைக்க.

14. (அ) இயற்கையின் வடிவமாற்றத்தை 'தெரியவில்லை' கவிதை கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்யாண்ஜியின் வாழ்க்கை எனும் கவிதை தரும் கருத்துக்களை சுருக்கி எழுதுக.

15. (அ) மரத்தின் இயல்புகளாக வைரமுத்து கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) ஈரோடு தமிழன்பனின் புதிய கவிதை வடிவங்கள் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. பாஞ்சாலி சபதம் உணர்த்தும் பெண்ணுரிமை சிந்தனைகளை விளக்கி வரைக.

17. தமிழ்த்தெய்வ வணக்கத்தின் வழி தமிழின் சிறப்புகளை எடுத்துரைக்க.

18. தைப்பாவையில் கண்ணதாசன் முத்தமிழ் நாடுகளைப் பாடியுள்ளமையை விரித்துரைக்க.

19. இயற்கையின் உண்மையான சாரத்தை அறிந்து கொள்வதில் உள்ள சிக்கலை பிச்சமூர்த்தி வழி நின்று விளக்குக.

20. 'வணக்கம் வள்ளுவ' என்ற நூல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

| D–1055 |
|---|

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fourth Semester

இலக்கணம் – புறப்பொருளும் அணியிலக்கணமும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. வெட்சித்திணையின் இலக்கணம் யாது?

2. போர் மலைதல் – விளக்கம் தருக.

3. பேய்க்காஞ்சி துறை – விளக்கம் தருக.

4. வஞ்சித்திணையின் இலக்கணம் யாது?

5. மகள் மறுத்து மொழிதல் துறை – விளக்கம் தருக.

6. வாகைப்படலத்தில் மகளிர்க்கு உரிய துறைகள் குறித்து எழுதுக.

7. உவமை தோன்ற காரணமான மூவகை ஒப்புமைகள் எவை?

8. உருவக அணியின் இலக்கணம் யாது?

9. ‘எண்வகை மெய்பாட்டின் இயல்வது’ – விளக்கம் தருக.

10. தன் மேம்பாட்டுரை அணி – விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வெட்சிப் படலத்தின் கொற்றவை நிலை, வெறியாட்டு ஆகிய துறைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நெடுமொழி கூறல் துறையின் சிறப்பு குறித்து விளக்குக.

12. (அ) உழபுல வஞ்சி, மழபுல வஞ்சி துறைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நொச்சித் திணையின் இலக்கணம் யாது? அதன் துறைகள் யாவை?

13. (அ) தும்பைப்படலத்தில் நால்வகைப் படைகளின் சிறப்பினைக் குறிப்பிடும் துறைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாடாண் படலத்தில் ஆற்றுப்படை வகைத் துறைகள் குறித்து விளக்குக.

14. (அ) தன்மையணியின் வகைகளைச் சான்றுகளுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) தீவக அணியின் இலக்கணம் யாது? அதன் வகைகள் குறித்து எழுதுக.

15. (அ) நிரல் நிறை அணியின் இலக்கணம் யாது? சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) புகழாப் புகழ்ச்சி அணி குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. புறப்பொருள் வெண்பாமாலை நூல் அமைப்பு குறித்து விவரி.

17. காஞ்சிப்படலத்தின் சிறப்புகளை விளக்கியெழுதுக.

18. வாகைப்படலத்தின் தனிச்சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

19. உவமை அணியின் இலக்கணம் யாது? அதன் வகைகள் குறித்து விவரி.

20. அதிசய அணியின் இலக்கணம் யாது? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்கியெழுதுக.

———————

| D–1056 |
|---|

| Sub. Code |
|---|
| 10743 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நாட்டுப்புறப் பாடல்களின் நோக்கம் என்ன?

2. சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள நாட்டுப்புறக் கூறுகள் யாவை?

3. நாட்டுப்புறப் பெண்தெய்வங்களில் ஏதேனும் இரண்டின் பெயர் தருக.

4. Folklore என்ற சொல்லின் அகராதிப்பொருள் என்ன?

5. நல்லதங்காளின் அண்ணன் பெயர் என்ன?

6. சிந்துப் பாடல்கள் எத்தனை வகைப்படும்?

7. ஏதேனும் இரண்டு பழமொழிகளை எழுதுக.

8. கரகாட்டத்தின் வேறு பெயர் என்ன?

9. ஏட்டில் எழுதாதக் கவிதை எது?

10. முத்துப்பட்டனின் மனைவியர் பெயர்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பிள்ளையார் தெய்வம் குறித்தும், பூசைகள் குறித்தும் எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பாரிப்பாடல் வெளிப்படுத்தும் அவலச்சுவையை விளக்குக.

12. (அ) தொல்காப்பியத்தில் காணலாகும் நாட்டுப்புறக் கூறுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விடுகதையின் சிறப்புகளை எழுதுக.

13. (அ) நாட்டுப்புற வீர விளையாட்டுகளைக் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கரகாட்டம் என்றால் என்ன? அதன் கலைநயம் அமையும் விதம் குறித்து எழுதுக.

14. (அ) பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆடப்படும் முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) வரலாற்றுக் கதைப்பாடல் குறித்து எடுத்துரைக்க.

15. (அ) நாட்டுப்புற மக்களிடையே காணலாகும் மாரியம்மன் குறித்த நம்பிக்கைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப் பாடல்களில் காணலாகும் எதுகை, மோனையைச் சான்றுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாட்டுப்புறவியல் தோற்றம், வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

17. கதைப்பாடல்களின் வகைகளை விரித்துரைக்க.

18. தாலாட்டுப் பாடல்கள் உணர்த்தும் சமூகப் பண்புகளைத் தொகுத்தெழுதுக.

19. நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை பழமொழிகள், விடுகதைகள் வழி புலப்படுத்துக.

20. நாட்டுக்கலைகள் குறித்து கட்டுரைக்க.

———————

| D–1057 |
|---|

| Sub. Code |
|---|
| 10744 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fourth Semester

இதழியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே' – எனக் கூறியவர் யார்?

2. தகவல் தொடர்பு சாதனங்கள் சிலவற்றை கூறுக.

3. இந்தியாவின் முதல் செய்தித்தாள் எது? எங்கு வெளிவந்தது?

4. மின்னஞ்சலை (Email) கண்டுபிடித்தவர் யார்?

5. இந்திய இதழியலின் முன்னோடி என அழைக்கப்படுபவர் யார்?

6. உலக இதழியலின் தந்தை யார்?

7. இந்தியச் செய்தி நிறுவனங்கள் யாவை?

8. இதழியல் சட்டங்கள் இரண்டினைக் கூறுக.

9. மாலை நாளிதழ்கள் எவை?

10. தமிழில் வெளிவரும் வார இதழ்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இதழியல் குறித்து பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழ்களை உள்ளடக்க அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

12. (அ) மக்களாட்சியில் இதழ்களின் பணிகளை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) விடுதலை இயக்கத் தமிழ் இதழ்கள் குறித்து எழுதுக.

13. (அ) செய்தியாளர்களை வகைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

(ஆ) எவையெல்லாம் செய்திகளாக மாற்றம் பெறும் கூறுக.

14. (அ) தலைப்பின் பணிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இதழ்களின் சுதந்திரத்திற்குத் தடையாக இருப்பவை எவை?

15. (அ) இதழ்களின் பகுப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களை பதிவு செய்யும் முறையை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களை வகைப்படுத்தி விளக்குக.

17. இதழியல் விதிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

18. செய்தியாளர்களின் பண்புகளை விவரிக்க.

19. இதழியல் சட்டங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. இதழ்களின் அலுவலக நிர்வாக அமைப்பினை விளக்குக.

| D–1058 |
|---|

| Sub. Code |
|---|
| 10751 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fifth Semester

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. புறநானூறு – குறிப்பு வரைக.

2. புண்ணுமிழ் குருதி – விளக்கம் தருக.

3. புனையா ஓவியம் என்று நெடுநல்வாடை குறிப்பிடுவனவற்றை எழுதுக.

4. கலித்தொகை –நூற்குறிப்பு எழுதுக.

5. செலவழுங்குவித்த பத்து என்றால் என்ன?

6. உடன்போக்கு என்றால் என்ன?

7. திருக்குறள் குறிப்பு வரைக.

8. செய்தொழில் வேற்றுமையான் என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

9. தொழுதுண்டு பின்செல்பவர் என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

10. இரவச்சம் – பொருள் தருக.

பகுதி ஆ — $(5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வினைமேற் சென்ற தலைவன் நிலையை ஆவூர் மூலங்கிழார் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கரந்தைப் போரின் விளைவுகளை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

12. (அ) பதிற்றுப்பத்து –நூல் அமைப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) கூதிர் காலத்தில் பல்வேறு உயிர்கள் அடைந்த துன்பங்கள் குறித்து எழுதுக.

13. (அ) திருமாலின் சிறப்புகளாகப் பரிபாடல் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைமகன் பிரிவிற்கு தலைவி கலக்கமுற்ற நிலையைச் செலவுப்பத்து வழி விளக்குக.

14. (அ) பெருமைக்குரிய செயல்களாக திருவள்ளுவர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) பண்புடைமை குறித்து திருவள்ளுவர் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

15. (அ) எதற்கெல்லாம் நாணுடைமை வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) உழந்தும் உழவே தலை – விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆவூர் மூலங்கிழார் பாடல்வழி 'புறநானூறு ஒரு வரலாற்றுக் களஞ்சியம்' என்பதை நிறுவுக.

17. இமயவரம்பன் சேரலாதனின் சிறப்புகளை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

18. நெய்தற்கலி பாடல்கள் வழி முதல், கரு, உரிப்பொருள் அமைப்பினை விவரி.

19. செவ்வேள் பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.

20. 'இன்றைய சமூக வளர்ச்சிக்குத் திருக்குறள்' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதுக.

| D–1059 |
|---|

| Sub. Code |
|---|
| 10752 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : எழுத்து – இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                                Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. சுட்டு மற்றும் வினா எழுத்துக்களைக் குறிப்பிடுக.

2. மொழி முதற்குற்றியலுகரம் என்றால் என்ன? சான்று தருக.

3. எழுத்துக்கள் பிறக்கும் உறுப்புக்கள் எவையெவை?

4. விளக்குக – நிறுத்த சொல், குறித்துவரு கிளவி.

5. பனை, கா ஆகிய சொற்கள் புணர்ச்சியில் பெறும் சாரியை எது?

6. "ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே" - விளக்குக.

7. வேணவா என்ற சொல்லின் புணர்ச்சி மாற்றத்தைக் குறிப்பிடுக.

8. புணர்ச்சி விதி தருக - ஆந்தை.

9. பொலந்தொடி என்ற சொல் எங்ஙனம் புணர்ந்தது?

10. வண்டும் பெண்டும் புணர்ச்சியில் பெறும் சாரியை எது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) எழுத்துக்களின் மாத்திரை அளவுகளாக நூன்மரபு கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) உடனிலை மற்றும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? விளக்குக.

12. (அ) சொல்லிடைப்படும் எழுத்தொலி மாற்றங்கள் எவையெவை? சான்றுடன் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) உயிரெழுத்துக்கள் எங்ஙனம் பிறக்கும்?- விளக்குக.

13. (அ) எழுத்துக்கள் மற்றும் சொற்கள் தம்முள் எங்ஙனம் புணரும்? சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி குறித்து எழுதுக.

14. (அ) எல்லாரும், எல்லீரும் என்னும் சொற்கள் உருபேற்கும் பாங்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிர்மயங்கியலில் இடம்பெறும் மரப்பெயர் புணர்ச்சிகளைத் தொகுத்தெழுதுக.

15. (அ) ணகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒன்பஃது + நூறு = தொள்ளாயிரம் - எங்ஙனம்? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. மொழிக்கு இறுதியாகும் எழுத்துகளைச் சான்றுகளுடன் விளக்கி உரைக்க.

17. மெய்யெழுத்துக்களின் பிறப்பு முயற்சிகளைப் பிறப்பியல் வழிநின்று எடுத்துரைக்க.

18. சாரியைப் புணர்ச்சி குறித்து விரித்துரைக்க.

19. ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி மாற்றங்களை விளக்கி எழுதுக.

20. னகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைச் சான்றுகளுடன் தொகுத்துரைக்க.

| D–1060 |
|---|

| Sub. Code |
|---|
| 10753 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மக்கள் தகவல் தொடர்பியல் (Mass communication) குறிப்பு தருக.

2. தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் வார இதழ்களைக் கூறுக.

3. முரசொலி இதழ் எப்போது தொடங்கப்பட்டது?

4. தலையங்கம் என்றால் என்ன?

5. தீக்கதிர் இதழ் குறித்து எழுதுக.

6. பத்திரிகைச் சட்டங்கள் இரண்டினைக் கூறுக.

7. இந்திய செய்தி நிறுவனங்களின் பெயர்களைச் சுட்டுக.

8. மரபுசார் ஊடகங்கள் எவை?

9. மின்னஞ்சல் (Email) குறிப்பு தருக.

10. தமிழ் இணையக் கல்விக்கழகம் - குறிப்புரைக்க.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஊடகவியலின் அடிப்படை செயல்முறை மூன்றினை விளக்குக.

(அல்லது)

(ஆ) சமூக ஊடகவியல் குறித்து எழுதுக.

12. (அ) சிறுவர் இலக்கியங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மகளிர் இதழ்கள் பற்றி எழுதுக.

13. (அ) செய்தி உள்ளடக்கம் எவ்வகையில் அமைதல் வேண்டும்?

(அல்லது)

(ஆ) தலையங்கத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

14. (அ) காட்சி ஊடக சாதனங்கள் எவை?

(அல்லது)

(ஆ) மரபுசார் ஊடகங்கள் குறித்து எழுதுக.

15. (அ) இணைய நூலகம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கைபேசியில் பயன்படுத்தப்படும் சமூக வலைதளங்கள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஊடக வடிவங்களின் வகைகளை விவரிக்க.

17. கால அடிப்படையில் வெளிவரும் இதழ்களை வகைப்படுத்திக் காட்டுக.

18. நிருபரின் தகுதிகள் குறித்து விரிவாக விளக்குக.

19. பத்திரிக்கை சட்டங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் குறித்து விவரிக்க.

---

| D–1061 |
|---|

| Sub. Code |
|---|
| 10754 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : சொல் – சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. "மன்னாப் பொருளும் அன்ன இயற்றே" - விளக்குக.

2. எழுவாய் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளைக் குறிப்பிடுக.

3. ஆகுபெயர் என்றால் என்ன?

4. விளியின் இலக்கணம் யாது?

5. அஃறிணைப் பெயர்களுள் நான்கினை எழுதுக.

6. உயர்திணைத் தெரிநிலை வினையின் தன்மைப் பன்மை வினை முற்றுகள் யாவை?

7. முன்னிலை அசைச்சொற்கள் எவையெவை?

8. உள்ளதன் நுணுக்கம் என்னும் பொருளை உணர்த்தும் உரிச்சொற்களை எழுதுக.

9. வினைமுற்று என்றால் என்ன?

10. செய்யுள் ஈட்டச் சொற்கள் எவையெவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) பெயர்களுக்கான மரபுகளாகக் கிளவியாக்கம் மொழிவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளைச் சுருக்கி எழுதுக.

12. (அ) விளக்குக - பிண்டப்பெயர்.

(அல்லது)

(ஆ) உயிரீற்றில் விளியேற்கும் பெயர்கள் எவையெவை? விளக்குக.

13. (அ) விரவுப்பெயர்களை அறிமுகம் செய்துரைக்க.

(அல்லது)

(ஆ) வினையெச்ச வாய்பாடுகள் குறித்தெழுதுக.

14. (அ) இடைச்சொல்லின் இலக்கணம் மற்றும் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருட்களைச் சான்றுடன் எழுதுக.

15. (அ) விளக்குக - உவமைத் தொகை, அன்மொழித் தொகை.

(அல்லது)

(ஆ) பத்துவகை எச்சங்களைச் சான்றுகளுடன் அறிமுகம் செய்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளி.

16. கிளவியாக்கம் சுட்டும் திணை, பால், இடம் குறித்த செய்திகளை விளக்குக.

17. ஐந்தாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளைச் சான்றுகாட்டி விவரிக்க.

18. உயர்திணைப் பெயர்கள் குறித்து எழுதுக.

19. உம் மற்றும் ஓ என்னும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருட்களைச் சான்றுடன் நிறுவுக.

20. தொல்காப்பியர் சுட்டும் பொருள்கோள்களை விளக்கி உரைக்க.

| D–1062 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Sixth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                                    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. எஸ்.எஸ். பவார் ஒப்பிலக்கிய ஆய்வுக்கு அளிக்கும் விளக்கம் யாது?

2. செலகல் இரட்டையர்கள் யாவர்?

3. ஜார்ஜ் ஹாட் எழுதிய கட்டுரை யாது?

4. புகழ் பெறல் கோட்பாட்டினைப் புகுத்தி நோக்கத் தக்க ஆய்வு முறை எது?

5. தமிழ் வீரயுகப் பாடல்கள் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

6. கீழ்க்கணக்குகள் உணர்த்தும் மூவகை உறுதிப்பொருள்கள் யாவை?

7. வானம்பாடிக் கவிஞர்களின் தனியிடம் பிடித்தவர் யார்?

8. காவிய காலம் நூலின் ஆசிரியர் யார்?

9. பாரதிதாசன் நடத்திய கவிதை வடிவ இதழ் எது?

10. இருவகை வீறுணர்ச்சிப் போக்குகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஒப்பிலக்கியம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய ஆய்வில் வரலாற்று நோக்கு - அறிமுகம் செய்க.

12. (அ) இணையியல் நோக்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ரெனிவெல்லாக் குறிப்பிடும் இலக்கியத்திற்கு உளவியலுக்குமான நான்கு நிலைகளை விளக்குக.

13. (அ) இசையின் தொன்மை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அறநெறி அணுகுமுறைக்கு வரையறை தருக.

14. (அ) சிற்றிலக்கியங்களின் இயல்புகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வீறுணர்ச்சிப் பாடல்கள் அறிமுகம் செய்க.

15. (அ) ஒப்பிலக்கியத்தின் பண்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) இந்திய இலக்கியம் - விளக்கம் தருக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. ஒப்பிலக்கியம் குறித்த நான்கு வகைப் பார்வைகளை விவரித்தெழுதுக.

17. சங்க வீரயுகப் பாடல்கள் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

18. தமிழ் இலக்கியத்தில் அறக்கோட்பாடு என்னும் பொருளில் கட்டுரை வரைக.

19. ஒப்பிலக்கியத்தின் பண்பும் பயனும் குறித்து விளக்கியுரைக்க.

20. உலக இலக்கியங்கள் குறித்து விவரித்தெழுதுக.

| D–1063 |
|---|

| Sub. Code |
|---|
| 10762 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Sixth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : பொருள் – இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முதலெனப்படுவது யாது?

2. உயர்ந்தோர்க்குரிய பிரிவுகளாகச் சுட்டப்படுவன யாவை?

3. பாலைக்குப் புறனாக அமையும் புறத்திணை எது?

4. தலைமகன் இயல்பு யாது?

5. கரணம் தோன்றக் காரணம் யாது எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்?

6. வெகுளி நான்கு எவை?

7. உவமத் தோற்ற வகைகள் யாவை?

8. வெண்பா உரிச்சீர்கள் எத்தனை?

9. நூலின் வகைகள் யாவை?

10. நூலின் உத்திகள் எத்தனை?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியரின் நிலம் பாகுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உடன்போக்கில் நற்றாய் கூற்று அமைவிடங்கள் குறித்து எழுதுக.

12. (அ) வெட்சித் திணை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) களவுக்குரிய அவத்தைகளை எடுத்துரைக்க.

13. (அ) எண்வகை மெய்ப்பாடுகளை அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) சுட்டி ஒருவர் பெயர் கொள்ளா மரபு பற்றி விளக்குக.

14. (அ) உவமப் பொருளில் உற்றது உணர்த்தல் என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) செய்யுள் வகைகளை விளக்குக.

15. (அ) பண்ணத்தி - விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) இளமைப் பெயர்கள் குறித்த தொல்காப்பியர் கருத்தைச் சுருக்கியுரைக்க?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. அகத்திணை குறிக்கும் கைக்கிளை பெருந்திணையின் பண்புகளை ஆராய்க.

17. தும்பைத் திணைத் துறைக் கோட்பாடுகளை எடுத்துரைக்க.

18. அகத்துக்கே உரிய மெய்பாடுகளைத் தொகுத்துரைக்க.

19. தொல்காப்பியர் காட்டும் அடியின் வகைகளை விவரித்தெழுதுக.

20. நால்வகை வருணத்தார் மரபுகளாகத் தொல்காப்பியர் உரைப்பன யாவை? விவரிக்க.

| D–1064 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Sixth Semester

நாடகத் தமிழ்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முதல் நாடக வகையாகக் கருதப்படுவது?

2. மனோன்மணீயன் எந்த நாடகத்தைத் தழுவியது?

3. இலங்கையில் புரட்சி நாடகங்கள் நடத்தியவர் யார்?

4. வானொலியில் எதை முதலில் நாடகமாக்கி ஒலிப்பரப்பினர்?

5. ‘முத்ரா‌ராக்ஷஸம்’ என்னும் நாடகத்தின் கதைக் கருவைக் குறிப்பிடுக.

6. அரிஸ்டாட்டிலின் நாடகத்தின் அமைப்பு எங்ஙனம் இருக்கும்?

7. சமரச சன்மார்க்க நாடக சபையை நிறுவியவர் யார்?

8. முதல் திராவிட இயக்க நடிகர் யார்?

9. அல்லி சரித்திரம் யாரால் அச்சிடப்பட்டது?

10. ‘நாடக ஞாயிறு’ என்று போற்றப்பட்டவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க அளவில்</u> விடை தருக.

11. (அ) கிருத்துவ நாடகங்கள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசக சுவாமி விலாசம், அரிச்சந்தர விலாசம் நாடகங்களை எடுத்துரைக்க.

12. (அ) தனிமனித வரலாற்று நாடகங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சுழல் அரங்க அமைப்பை விளக்கி வரைக.

13. (அ) பெண் நாடகக் கலைஞர் எஸ்.டி. சுப்புலட்சுமி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'சுவடுகள்' என்னும் நாடகம் குறித்து எழுதுக.

14. (அ) இந்திய மொழி நாடகங்கள் குறித்துத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஸ்ரீமதி வாரனின் 'தொழில்முறை' நாடகத்தினைப் புலப்படுத்துக.

15. (அ) மணிமேகலை காட்டும் நாடக குறிப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாடக வகை இரண்டினைக் கூறி விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பல்லவர்கால நாடகங்கள் குறித்துக் கட்டுரைக்க.

17. வீதி நாடகங்கள் பற்றியக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. குற்றாலக் குறவஞ்சி நாடகத் தன்மைகளை விவரிக்க.

19. வடமொழி நாடகங்களின் இயல்புகளைச் சுட்டிரைக்க.

20. ஷேக்ஸ்பியர் நாடகங்கள் தனித்தன்மைகளை விளக்குக.

**D–1065**

**Sub. Code**
**10764**

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2025.

Sixth Semester

விளம்பரக் கலை

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. விளம்பரம் குறித்து அ.விநாயக மூர்த்தி கூறுவது யாது?

2. கூவியர் என்போர் யார்?

3. அமெரிக்க விளம்பரங்களின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?

4. விளம்பரத்தின் அழகியல் கூறுகளை உள்ளடக்கியது எது?

5. 1983இல் தடைசெயப்பட்ட உணவுப்பொருட்கள் எவை?

6. ABC என்பதன் விரிவாக்கம் என்ன?

7. ரிடிபியூஷன் என்பது யாது? அதன் பணி என்ன?

8. ஒன்றுக்கு மேற்பட்ட விளம்பர நகல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

9. திரும்பத் திரும்பக் கூறிமனதில் பதிய வைக்கும் உத்திக்குச் சான்று தருக.

10. இந்தியப் பாதுகாப்புச் சட்டம் எவற்றைக் குற்றமாகக் குறித்துள்ளது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விளம்பரத்தின் இயல்புகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) தகவல் விளம்பர நோக்கங்களைப் பட்டியலிடுக.

12. (அ) செய்தித்தாள் விளம்பரங்களின் குறைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வானொலி விளம்பரங்களின் நன்மைகள் குறித்து எழுதுக.

13. (அ) விளம்பர நிறுவனத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நிறுவனத்தால் விளம்பரதாரர் அடையும் பயன்கள் குறித்து எழுதுக.

14. (அ) நுகர்வோர் வழிகாட்டி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மிகைத்துக் கூறும் உத்தியின் தன்மைகளைப் புலப்படுத்துக.

15. (அ) சலுகை அறிவிப்பு உத்தி - குறிப்பு தருக.

(அல்லது)

(ஆ) விளம்பரங்களின் எதிர்வினைகள் பற்றி எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. விளம்பரத் தயாரிப்பின் இதர அம்சங்களாகக் குறிக்கப்படுவன யாவை? விவரித்தெழுதுக.

17. விளம்பரத்தின் கூறுகளை விவரித்தெழுதுக.

18. விளம்பரத் தலைப்புகளின் வகைகளை விளக்கியுரைக்க.

19. விளம்பரம் தொடர்பான சட்டங்களை விவரித்தெழுதுக.

20. விளம்பரம் தயாரிக்கும் துறையின் பணிகளை விரித்துரைக்க.